ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம: ஸ்ரீமத் வரத குரவே நம:

## திருவேங்கடமுடையான், ஸ்ரீவேதாந்தாசார்யர் - வருஷ திருநக்ஷத்திரம் - புரட்டாசி – திருவோணம்



திருவேங்கடமுடையான், திருமலை

### தனியன்

கந்யாஸ்ரவண ஸஞ்ஜாதம் ஶேஷாசல நிவாஸிநம் /
ஸர்வேஷாம் ப்ரத மாசார்யம் ஸ்ரீநிவாஸமஹம்பஜே //

ஸ்ரவணே திவ்யநக்ஷத்ரே க்ருதாவதரணம் விபும் /
விஷ்ணுமாதிகுரும்லக்ஷ்ம்யா: மந்தரரத்நபரதம் பஜே //

### மங்கள ஸ்லோகம்

ஸ்ரிய: காந்தாய கல்யாண நிதயே நிதயேऽர்த்தி நாம் /
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் //

திருவரங்கத்திற்கு அடுத்தபடியாக ஆழ்வார்கள் 202 பாசுரங்களால் திருவேங்கடமுடையானை மங்களாஸாசனம் செய்துள்ளார்கள். எல்லா பாசுரங்களும் நமது உள்ளத்தை உருக்கி உண்பதாக அமைந்து உள்ளது. அவற்றுள் சில பாசுரங்களை இங்கே அனுபவிப்போம். எல்லா உயிர்களுக்கும் ஒப்பற்ற ஒரு தாயான திருவேங்கடமுடையான் நம்முடைய தோஷங்களை எல்லாம் குணமாகக் கொண்டு நம்மைப் பரிசுத்த ஆத்மாக்களாக ஆக்கி நம் ஸ்வரூபம் விளங்கும்படி பண்ணிகிறான். திருவேங்கடமுடையான் தன் அடியார்கள் விஷயத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்துகொண்டு அவர்களை இந்தக் கொடு உலகத்தின்பாதிப்புக்களிருந்து காத்தருளுகிறான். இப்படி நம்முடைய தோஷங்களை குணமாகக் கொள்வதும், நம்மை தீயசக்திகளிருந்து காப்பற்றுவதும், திருவேங்கடமுடையான் நம்மிடத்திலே காட்டும் வாத்ஸல்ய குணமாகும்.

<u>பொய்கையாழ்வார் - முதல்திருவந்தாதி - 68ஆம் பாசுரம்</u>

உணர்வாரார் உன்பெருமை ? ஊழிதோறூழி
உணர்வாரார் உன்னுருவந்தன்னை? - உணர்வாரார் ?
விண்ணகத்தாய்! மண்ணகத்தாய்! வேங்கடத்தாய். நால்வேதப்
பண்ணகத்தாய்! நீகிடந்தபால்.

<u>பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 46ஆம் பாசுரம்</u>

பயின்றது அரங்கம் திருக்கோட்டி. பன்னாள்
பயின்றதுவும் வேங்மடமே பன்னாள் - பயின்றது
அணிதிகழும்சோலை அணிநீர்மலையே.
மணிதிகழும் வண்தடக்கைமால்.

<u>பேயாழ்வார் - மூன்றாம் திருவந்தாதி - 32ஆம் பாசுரம்</u>

பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும்.
நூற்கடலும் நுண்ணூலதாமரைமேல் - பாற்பட்
டிருந்தார்மனமும் இடமாகக்கொண்டான்.
குருந்தொசித்த கோபாலகன்.

<u>திருமழிசையாழ்வார்</u>

<u>நான்முகன்திருவந்தாதி - 42ஆம் பாசுரம்</u>

சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை
நின்றுவினைகெடுக்கும் நீர்மையால். - என்றும்
கடிக்கமலநான்முகனும் கண்மூன்றத்தானும்
அடிக்கமலமிட்டேத்தும் அங்கு.

**திருச்சந்த விருத்தம் - 60**

செழுங்கொழும் பெரும் பனி பொழிந்திட . உயர்ந்த வேய்
விழுந்துலர்ந்தெழுந்து விண்புடைக்கும்**வேங்கடத்துள்** நின்று .
எழுந்திருந்து தேன் பொருந்து பூம்பொழில் தழைக்கொழுஞ் .
செழுந்தடங்குடந்தையுள் கிடந்தமாலுமல்லயே?

**திருவாய்மொழி 3ஆம் பத்து 3ஆம் திருவாய்மொழி 8ஆம் பாசுரம்**

குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்
அன்றுஞாலம் அளந்தபிரான். பரன்
சென்றுசேர் **திருவேங்கடமாமலை**
ஒன்றுமேதொழ நம்வினைஓயுமே.

**திருவாய்மொழி 6ஆம் பத்து 10ஆம் திருவாய்மொழி 10ஆம் பாசுரம்**

அகலகில்லேன்இறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா !
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னையாள்வானே !
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்பும் **திருவேங்கடத்தானே** !
புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே.

**திருவிருத்தம் - 10ஆம் பாசுரம்**

மாயோன் **வடதிருவேங்கட** நாட. வல்லிக்கொடிகாள் !
நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர்உரையீர். நுமது
வாயோ? அதுவன்றிவல்வினை யேனும் கிளியுமெள்கும்
ஆயோ? அடும்தொண்டையோ? அறையோ? இதறிவரிதே.

**பெரியதிருவந்தாதி - 68ஆம் பாசுரம்**

கல்லும்கனைகடலும் வைகுந்தவானாடும்
புல்லென்றொழிந்தனகொல்? ஏபாவம்! - வெல்ல
நெடியான் நிறங்கரியான் உள்புகுந்துநீங்கான்
அடியேனதுள்ளத்தகம்.

**குலசேகராழ்வார் - பெருமாள் திருமொழி – 4ஆம் திருமொழி - 9ஆம் பாசுரம்**

செடியாய வல்வினைகள் தீர்கும் திருமாலே !
நெடியானே ! **வேங்கடவா !** நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.

**பெரியாழ்வார் திருமொழி - 5ஆம் பத்து 4ஆம் திருமொழி 1ஆம் பாசுரம்**

சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய் ! . உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ ! தாமோதரா ! சதிரா !.
என்னையும் என் உடைமையையும் உன்சக்கரப் பொறி ஒற்றிக்கொண்டு.
நின் அருளே புரிந்திருந்தேன் இனிஎன்திருக்குறிப்பே ?

**ஸ்ரீஆண்டாள் - நாச்சியார் திருமொழி - 8ஆம் திருமொழி - 7ஆம் பாசுரம்**

சங்கமா கடல் கடைந்தான் தண் முகில்காள் ! வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக் கீழ் அடி வீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கை மேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து. ஒருநாள்
தங்கு மேல் என்னாவி தங்கு மென்று உரையீரே.

**திருப்பாணழ்வார் - அமலனாதிபிரான் - 3ஆம் பாசுரம்**

மந்திபாய் வடவேங்கடமாமலை . வானவர்கள்
சந்திசெய்ய நின்னான் அரங்கத்தரவினணையான் .
அந்திபோல் நிறத்தாடையும் அதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே.

**திருமங்கையாழ்வார்**

**பெரியதிருமொழி - 1ஆம் பத்து 10ஆம் திருமொழி முதல் பாசுரம்**

கண்ணார் கடல் சூழ் இலங்கைக்கு இறைவன் தன் .
திண்ணாகம்பிளக்கச் சரம்செல உய்த்தாய் ! .
விண்ணோர் தொழும் வேங்கடமாமலை மேய .
அண்ணா! அடியேன் இடரைக் களையாயே.

தென்திருவேங்கடமாகிய திருவெள்ளக்குளத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீநிவாசரைப் பற்றி ( ஸ்ரீ அண்ணன் பெருமாளைப் பற்றி) திருமங்கையாழ்வார் அருளியுள்ள ஒரு பாசுரத்தை கீழே அனுபவிப்போம் (இந்தப் பாசுரம் மேலே குறிப்பிட்டள்ள பாசுரம்போலவே அமைந்துள்ளது.)



ஸ்ரீ அண்ணன் பெருமாள், திருவெள்ளக்குளம் - தென்திருவேங்கடம்

## பெரியதிருமொழி - 4ஆம் பத்து 7ஆம் திருமொழி முதல் பாசுரம்

கண்ணார்கடல்போல் திருமேனிகரியாய்! .
நண்ணார்முனை வென்றிகொள்வார் மன்னுநாங்கூர்
திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக்குளத்துள்
அண்ணா! . அடியேன் இடரைக் களையாயே.

## திருக்குறுந்தாண்டகம் - 7ஆம் பாசுரம்

இம்மையைமறுமைதன்னை எமக்குவீடாகிநின்ற .
மெய்ம்மையை விரிந்தசோலை வியன்திருவரங்கம் மேய .
செம்மையைக்கருமை தன்னைத் திருமலையொருமைறயானை .
தன்மையை நினைவார் என்தன்தலைமிசை மன்னுவாரே.

திருநெடுந்தாண்டகம் - 16ஆம் பாசுரம்

கன்றுமேய்த்து இனிதுகந்த காளாய்! என்றும்
கடிபொழில்சூழ் கணபுரத்துஎன்கனியே! என்றும்
மன்றமரக்கூத்தாடிமகிழ்ந்தாய்! என்றும்
வடதிருவேங்கடம் மேயமைந்தா! என்றும்
வென்றசுரர்குலம்களைந்த வேந்தே! என்றும்
விரிபொழில்சூழ்திருநறையூர் நின்றாய்! என்றும்
துன்றுகுழல்கருநிறத்து என்துணையே! என்றும்
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே.

சிறிய திருமடல்

சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே – 69ஆம் பாசுரம்

பெரிய திருமடல்

மழைக்கூந்தல் தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும் - 6 பாசுரம்

மின்னி மழைதவழும் வேங்கடத்து எம்வித்தகனை - 124 பாசுரம்

உய்யக்கொண்டார் அருளியுள்ள திருப்பாவைத் தனியன்

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே !. தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய் - நாடிநீ
வேங்கடவற்கு என்னை விதியென்ற இம்மாற்றம்
நாம் கடவாவண்ணமே நல்கு.

எம்பெருமானார் அருளியுள்ள ஸ்ரீபாஷ்ய மங்கள ஸ்லோகம்

ஸ்ருதி ஸிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே

இராமானுசநூற்றந்தாதி - 106ஆம் பாசரம்

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் . மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர்நல்லோர். அவைதன்னொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமாநுசன் மனத்து இன்று அவன் வந்து
இருப்பிடம் . எந்தன் இதயுத்துள்ளே தனக்கின்புறவே.

ஸ்ரீபராசுரபட்டர் அருளியுள்ள ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரத்தின் 8ஆம் ஸ்லோகம்

ஸ்ரீரங்கம் கரிஸைலம் அஞ்ஜநகிரிம் தார்சஷ்யாத்ரிஸிம்ஹாசலௌ
ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ்ச பதரீநாராயணம் நைமிஸம் /
ஸ்ரீமத்த்வாரவதீப்ரயாக மதுராயோத்யாகயா: புஷ்கரம்
ஸாளக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோSயம் முநி: //

மணவாளமாமுனிகள் - திருவாய்மொழி நூற்றந்தாதி - 23ஆம் பாசுரம்

ஒழிவிலாக்காலம் உடனாகிமன்னி
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு - எழுசிகர
வேங்கடத்துப்பாரித்த மிக்கநலம்சேர்மாறன்
பூங்கழலை நெஞ்சே! புகழ்.

மணவாளமாமுனிகள் - திருவாய்மொழி நூற்றந்தாதி - 60ஆம் பாசுரம்

உலகுய்யமால் நின்ற உயர்வேங்கடத்தே
அலர்மகளை முன்னிட்டு அவன்தன் - மலரடியே
வன்சரணாய்ச்சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே
உன்சரணாய் நெஞ்சமே! உள்.

ஸ்ரீபிரதிவாதி பயங்கரம் அண்ணா ஸ்ரீவேங்கடேச ஸுப்ரபாதம், ஸ்தோத்ரம், ப்ரபத்தி, மங்களம் முதலிய ஸ்தோத்ரங்கள் அருளிச் செய்துள்ளார். அவற்றுள் சில ஸ்லோகங்களை கீழே அனுபவிப்போம்.

ஸ்ரீவேங்கடேச ஸுப்ரபாதம்

3ஆம் ஸ்லோகம்

மாதஸ் ஸமஸ்த ஜகதாம் மதுகைட பாரே:
வசேஷாவிஹாரிணி மநோஹர திவ்யமூர்த்தே /
ஸ்ரீஸ்வாமிநி ஸ்ரிதஜந ப்ரியதாநஸீலே
ஸ்ரீவேங்கடேஸ தயிதே தவ ஸுப்ரபாதம் //

29வது ஸ்லோகம்

இத்தம் விருஷாசலபதே ரிஹ ஸுப்ரபாதம்
யே மாநவா: ப்ரதிதினம் படிதும் ப்ரவ்ருத்தா: /
தேஷாம் ப்ரபாதஸமயே ஸம்ருதிரங்கபாஜாம்
ப்ரஜ்ஞாம் பரார்த்த ஸுலபாம் பரமாம் ப்ரஸுதே //

ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்ரம்

முதல் ஸ்லோகம்

கமலா குச சூசுக கும்குமதோ நியதாருணி தாதுல நீலதநோ !
கமலாயதலோசந! லோகபதே விஜயீபவ வேங்கடஸைலபதே !!

13ஆம் ஸ்லோகம்

அஜ்ஞாநிநா மயா தோஷாந் அஸேஷாந் விஹிதாந் ஹரே !
சஷமஸ்வ த்வம் சஷமஸ்வ த்வம் ஸேஷஸைல ஸிகாமணே !!

ஸ்ரீவேங்கடேச ப்ரபத்தி

முதல் ஸ்லோகம்

ஈஸாநாம் ஜகதோऽஸ்ய வேங்கடபதேர் விஷ்ணோ: பராம் ப்ரேயஸீம்
தத்வசஷஸ ஸ்தல நித்யவாஸ ரஸிகாம் தத்சஷாந்தி ஸம்வர்த்திநீம் !
பத்மாலங்க்ருத பாணி பல்லவயுகாம் பத்மாஸநஸ்தாம் ஸ்ரியம்
வாத்யல்யாதி குனோஜ்ஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகந்மாதரம் !!

16ஆம் ஸ்லோகம்

ஸ்ரீஸ ஸ்ரியா கடிகயா த்வதுபாயபாவே
ப்ராப்யே த்வயி ஸ்வயமுபேயதயா ஸ்புரந்த்யா !
நித்யாஸ்ரிதாய நிரவத்ய குணாய துப்யம்
ஸ்யாம் கிங்கரோ வ்ருஷகிரீஸ ந ஜாது மஹ்யம் !!

ஸ்ரீவேங்கடேச மங்களம்

முதல் ஸ்லோகம்

ஸ்ரீய: காந்தாய கல்யாண நிதயே நிதயேऽர்த்தி நாம் !
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் !!

13ஆம் ஸ்லோகம்

ஸ்ரீமத் ஸுந்தரஜாமாத்ருமுநிமாநஸ வாஸிநே !
ஸர்வலோக நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் !!

14ஆம் ஸ்லோகம்

மங்களாஸாஸனபரைர் மதாசார்ய புரோகமை: !
ஸர்வைஸ்ச பூர்வைராசார்யைஸ் ஸத்க்ருதாயாஸ்து மங்களம் !!

மங்களம்
ஸ்ரீரங்க மங்கள மணிம் கருணா நிவாஸம்
ஸ்ரீவேங்கடாத்ரி ஸிகராலய காள மேகம் !
ஸ்ரீஹஸ்தி ஸைல ஸிகரோஜ்ஜ்வல பாரிஜாதம்
ஸ்ரீஸம் நமாமி ஸிரஸாயது ஸைலதீபம் !!

புராணவசநம்

வேங்கடாத்ரிஸமம் ஸ்தாநம் ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சந: /
வேங்கடேஸ ஸமோ தேவோ நபூதோ ந பவிஷ்யதி //

<u>வேதத்தில் விளங்கும் வேங்கடவன்</u>

திருவேங்கடவன் தனிச்சிறப்பை யஜுர் வேதத்தில் காட்டியுள்ளபடி அனுபவிப்போம். (யஜுஸ்ஸம்ஹிதை 6-2-4) ஸ்ரீநிவாசன் வேண்டுவார்க்கு வேண்டித்தெல்லாம் கொடுத்துக் கொண்டு திருவேங்கடமெனும் திருமலையில் விளங்கி வருகிறான். (யஜுஸ்ஸம்ஹிதை 1-2-13) ஹே விஷ்ணு தேவனே! நீர் வானுலகிலிருந்தும், மஹர்லோகத்திலிருந்தும், அந்தரிக்ஷ லோகத்திலிருந்தும் கொண்டு வந்த பெருஞ்செல்வங்களால் உமது கைகளை நிரப்பிக் கொள்வீராக. அவற்றை மேன்மேலும் பெருக்கி, மிகுந்த முத்து, மணி, வைரங்களை வலது திருக்கையாலும், இடது திருக்கையாலும் வாரிவாரி வழங்கியருள்வீராக என்பது மண்ணவர் ப்ரார்த்தனை. இதை அவ்வண்ணமே எம்பெருமான் நிறைவேற்றிவருகிறான்.

(ரிக் வேத அஷ்டகம் 8, வர்க்கம் 13, முதல் ரிக்) ரிக்வேதம் ஸ்ரீவேங்கடேச பகவான் யார் யார் என்னென்ன ப்ரார்த்தனை செய்து கொண்டாலும் அவை யாவற்றையும் நிறைவேற்றித் தருகிறார் என்கிறது.

**`அராயி காணே விகடே கிரிம் கச்ச'** (பவிஷ்யோத்தர புராணம் 14-21) என்று சொல்லப்பட்ட பெரிய திருமலையே சேஷாத்ரிமலை என்கிறது புராணம். திருவநந்தாழ்வானின் உருவமே இந்த வேதமயமான மலை. ஆக, யஜ்ஞஸ்வரூபியான மஹாவிஷ்ணு மண்ணுலகத்தவர் செல்வந்தர்களாய் இன்புற்று வாழ்க்கை வாழவேனுமென்ற சுபமான திருவுள்ளத்துடன் திருமலைதிருப்பதியில் ஸ்ரீநிவாஸனாக விளங்கி வருவதையும், அப்பகவான் எல்லாவுலகங்களிலுள்ள செல்வங்களையும் தன்னிடம் நிரப்பிக் கொண்டு அவற்றை ஒன்று பத்தாகப் பெருக்கி, இரு கைகளாலும் பொன்னும், மணியும் முத்துமாக வாரி வழங்குவதாக யஜுர்வேதம் கூறுகிறது. திருமலையப்பனிடம் அவனடியார்களை முன்னிட்டுக் கொண்டு அவன் மலைக்குப் போய் ஸ்ரீநிவாசனான அவனைச் சரணம்பற்றி எதைக் கேட்டாலும் அப்படியே நிறைவேற்றி வைப்பதை ரிக்வேதம் கூறுகிறது. இதையே பொய்கையாழ்வாரும் முதல் திருவந்தாதி 26ஆம் பாசுரத்தில் தெருவிக்கிறார். (எழுவார் விடைகொள்வார்)

**ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ.உ.வே.ஆர்.கண்ணன் ஸ்வாமி அருளியுள்ள கட்டுரையிலிருந்து மேலே சொன்ன விஷயங்கள் ஏடுக்கப்பட்டது.**

<u>திருவேங்கடமுடையான் தும்பையூர் கொண்டிக்கு மோக்ஷமளித்தல்</u>

இராமாநுசர் பிற்காலத்தில் திருமலைக்கு எழுந்தருளியிருந்த போது, தும்பையூர் கொண்டி என்னும் இடைப்பெண்ணொருத்தி முதலிகளுக்கு தினந்தோறும் தயிர் கொடுத்து வந்தாள். உடையவர் திருமலையை விட்டுப் புறப்படும் முன்னர் தயிர் கொடுத்தற்கு விலையாகப் பொருள் வேண்டி வந்தாள் அந்த தும்பையூர் கொண்டி. அப்பொழுது எம்பெருமானாரை ஸேவித்ததாலும், கிடாம்பியாச்சான் அளித்த ஸ்ரீபாததீர்த்தத் தளிகை ப்ராஸாதங்களை உட்கொண்டதாலும், நல்ல ஞானம் கைவரப்

பெற்று `யதீஸ்வரரே! அடியேனுக்கு தயிர்க்காகப் பொருள் வேண்டாம், மோசஷத்தை அளிப்பீராக' என்று விண்ணப்பித்தாள். அதுகேட்ட யதிராஜர் `திருவேங்கடமுடையன்னன்றோ மோசஷத்தையளிப்பவன்' என்றார். அவ்விடைப் பெண்ணும் `அடியேனுக்கு மோசஷ மளிக்கும்படி திருவேங்கடமுடையானுக்கு தேவரீர் ஒரு சிறு முறி எழுதித்தர வேணும்' என்றாள். கருணைக்கடலான உடையவரும் அவ்வாறே எழுதிக்கொடுத்தார். இவளும் அத்தைப்பெற்றுக்கொண்டு திருவேங்கடமுடையான் ஸந்நிதக்குச் சென்று த்வஜஸ் தம்பத்தின் முன்பே அச்சிறுமுறியை வைத்து வணங்கி அன்றைய தினமே வீடு பேற்றினை அடைந்தாள். **(ஸ்ரீ.ஆர் ரகுராமன்ஸ்வாமி (பாலாஜி) எழுதியுள்ள ஸ்ரீராமாநுஜ அதிமாநுஷஸ்தவ அநுபவம் என்ற கட்டுரையிலிருந்து மேலே உள்ள குறிப்பு எடுக்கப்பட்டது.)**

## ஸ்ரீவேதாந்தாசார்யர்



**ஸ்ரீவேதாந்தாசார்யர், திருவல்லிக்கேணி**

## தனியன்

கந்யாஸ்ரவண ஸம்பூதம் கண்டாம்ஸம் வேங்கடேஸிது: /
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேஸிகம் //
ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ /
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி: //

வாழித்திருநாமம்

கன்னிதன்னிலோணத்தில் கச்சிவந்தோன் வாழியே
கலைபலவும் திருநாவில் கமழநின்றோன் வாழியே
மன்னுபுகழ் உலகாரியன் மலரடியோன் வாழியே
மதிளரங்கர் மலரடியின் மாண்புரைத்தோன் வாழியே
துன்னுபுகழாழ்வார்கள் தூய்மை சொல்வோன் வாழியே
தூயவர்சேர் அயிந்தை மெய்ய னடிபணிந்தோன் வாழியே
மின்னிலகு மணி மகுடத் தொப்பாரம் வாழியே
வேதாந்த வாசிரியன் தன்விரிபுகழும் வாழியே.

இந்த வாழித்திருநாமத்தை அருளிச் செய்தவர் யார் என்று தெரியவில்லை. திருக்கோயில்களில் இந்த வாழித்திருநாமத்தை அநுசந்திப்பதில்லை.

ஸ்ரீகந்தாடை நாயன் அருளிய பெரியதிருமுடி யடைவு நூலில் இருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள விஷயங்கள் எடுக்கப்பட்டது.

இவருக்குத் திருவவதார ஸ்தலம் பெருமாள் கோயில்.

இவருடைய திருநாமங்கள் - தூப்பில்பிள்ளை, வேங்கடாசார்யர்,
வேதாந்தாசார்யர், வேதாந்த தேசிகன் இன்னும் பல.

ஆசாரியர் : கிடாம்பி அப்பிள்ளான்

சிஷ்யர்கள் : குமாரரான நயினாராசார்யர், ப்ரஹ்ம தந்தர ஸ்வதந்தர ஜீயர்.

இவர் வடமார்க்கத்துக் கெல்லாம் ஸ்ரேஷ்டர். இவர் அநேக மாயாவாதி வித்வான்களை ஜயித்தார்.

எங்களாழ்வான் ஸ்ரீபாதத்தில் நடாதூரம்மாள்
நடாதூரம்மாள் ஸ்ரீபாதத்தில் ஸ்ருதப்ராகாஸிகாபட்டர், கிடாம்பி அப்பிள்ளான்
கிடாம்பி அப்பிள்ளான் ஸ்ரீபாதத்தில் தூப்பில் பிள்ளை என்னும் வேதாந்தாசார்யர்

இவர் செய்தருளின க்ரந்தங்கள் - ரஹஸ்யத்ரயஸாரம், அமலனுதிபிரான் வ்யாக்யானம், ஸாரஸாரம், ரஹஸ்ய சிகாமணி, ரஹஸ்ய ரத்னாவளீ ஹ்ருதயம், ஸம்ப்ரதாய பரிசுத்தி, ப்ரதான ஸதகம், அபயப்ரதானஸாரம், உபகார ஸங்க்ரஹம், விரோதபரிஹாரம், பரமபதஸோபானம், பரமபதபங்கம், ப்ரபந்தஸாரம், ஆஹாரநியதி, தத்வத்ரயம், சததூஷணி, ஸர்வார்த்தஸித்தி, தத்வமுக்தாகலாபம், ஸ்தோத்ரபாஷ்யம், பாங்சராத்ரரசைஷ, ந்யாஸத்ரம், பகவத்த்யாநஸோபாநம், அபீதிஸ்தவம், தஸாவதாரஸ்தோத்ரம், மதுரஸ்தவம், கோதாஸ்துதி, ஸ்ரீஸ்துதி, யதிராஜ ஸ்ப்ததி, த்ரவிடோபநிஷத்தாத்பர்யம், கருடபஞ்சாஸத், ஸங்கல்ப ஸூர்யோதயம், ந்யாயபரிசுத்தி, ந்யாயஸித்தாஞ்ஜனம், கீதாபாஷ்யஸாரம், சதுஸ்லோகீ வ்யாக்யானம், அதிகரண ஸாராவளி, தத்வடீகை, அவித்யா கண்டனம்,

குத்ருஷ்டித்ரய நிராஸம், தாத்பர்ய சந்த்ரிகை, பாதுகா ஸஹஸ்ரம், மீமாம்ஸாபாதுகை, மீமாம்ஸாபாஷ்யம், யாதவாப்யுதயம், வேதார்த்த ஸங்கரஹ வ்யாக்யானம், ஹம்ஸ ஸந்தேஸம், ஹயக்ரீவ ஸ்தோத்ரம், கோபால விம்ஸதி, கருடதண்டகம், மற்றும் பல.

## நிகமாந்த மஹாகுரு

நம் இராமாநுச தர்சனத்தை வளர்த்தருளின ஆசார்யர்களில் ஸ்ரீமந்நிகமாந்த மஹாகுரு முதல் ஸ்தானம் பெறுவர். இவர் பல படிகளாலும் இராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பெருமைப் படுத்தினிவர். ஸ்ரீபாஷ்யத்திற்குக் காப்பாகப் பல பல க்ரந்த ரத்தினங்களை அருளிச்செய்தும், ஸ்ரீபாஷ்யத்தைப் பலகால் ப்ரவசநஞ் செய்தருளியும், ஸ்ரீபாஷ்யார்த்த தூஷ்கர்களைப் பலவாறு கண்டித்தும், ஸ்ரீபாஷ்யகாரரைப் பல பல ச்லோகங்களால் ஏத்தியும்-இப்படியே தமது வாழ்நாளைக் கழித்தருளின மஹாநுபாவர் இவர். ந்யாயஸித்தாஞ்ஜநம், தத்வ முக்தாகலாபம், ஸர் வார்த்தஸித்தி, அதிகரண ஸாராவளி, தத்வடீகா, சததூஷணி, தாத்பர்ய சந்த்ரிகை - இத்யாதிகளான பல உத்க்ரந்தங்கள் நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அணி விளக்காக அவதரித்தவை. இவர் முப்பது தடவை ஸ்ரீபாஷ்யப்ரவசநம் செய்தருளினவர் என்பது ஸங்கல்பஸூர்யோதயத்தில் இவர் தாமே பணித்த த்ரிம்சத் வாரம் ச்ராவிதசாரீரகபாஷ்ய: என்ற ச்லோகத்தினால் விளங்கும். ஞானம், அனுட்டானம், வைராக்யம் முதலிய ஸகலகுணங்களிலும் நிகரற்றவர்.

காஞ்சீ ஸ்ரீ உவே **PBA** ஸ்வாமி அருளியுள்ள திருவத்யயனோத்ஸவ வைபவ தீபிகையிலிருந்து மேலே கூறிய விஷயங்கள் எடுக்கப்பட்டது.

## தேசிகனும் திவ்யப்ரப்ந்தமும்

வடமொழிப் பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தால் கடைந்தவர் நம்முடைய தேசிகன். இவரைப் போன்ற ஸம்ஸ்கிருத வித்வான் நபூதோந பவிஷ்யதி என்றால் மிகையாகாது. ஸம்ஸ்க்ருத வேதாந்தத்நிற்கு உபப்ரும் ஹணங்களாகவுள்ள இதிஹாஸபுராணாதிகள் இவர்க்கு வாசோவிதேயங்கள். ஸஹகாரிஸாமக்ரிகளான ந்யாய மீமாம்ஸைகளும் இவர் திருவுள்ளத்தைப் பின்செல்லுமவை. இங்ஙனே திருநாவீறுடைய பிரானகிய இவர் பேசியிருக்கிற ஒரு பாசுரத்தைக் கீழே காணுங்கோள்.

பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார்தண் பொருநல்வருங் குருகேசன் விட்டுசித்தன் துய்ய குலசேகரன் நம்பாணநாதன் தொண்டரடிப்பொடி மழிசைவந்தசோதி வையமெலாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோ னென்றிவர்கள் மகிழ்ந்துபாடும் செய்யதமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே.

இது தேசிகப்பிரபந்தகளுள் ஒன்றான அதிகாரரஸங்க்ரஹத்தின் முதல் செய்யுள். ஸம்ஸ்க்ருதவேத வேதாந்தங்களில் எவ்வளவு பரிச்ரமப்பட்டாலும் கலங்கின ஞானமே அவற்றால் உண்டாகும் என்றும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களைக் கொண்டுதான் தெளிவு பெறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் இதனால் காட்டினார். இங்கு ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களைப் பற்றிச் சொல்லுகையில் தெளியாத மறை நிலங்கள் என்று துணிந்து அருளிச் செய்தமை நோக்கத் தக்கது. இதிஹாஸ புராணாதிகளைக் கொண்டு உபநிஷத்துக்களின் தாற்பரியத்தை அறிவதைக்காட்டிலும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு அறிவதே மிகச் சிறந்தது என்கிற திருவுள்ளத்தை த்ரமிடோப நிஷத் தாத்பர்யரத்நாவளியிலும் நீருபித்தருளியுள்ளார். யதிராஜஸப்ததியில் நம்மாழ்வாரைப்பற்றி தேசிகன் ஒரு ச்லோகமருளிச்செய்தார் காண்மின். யஸ்ய ஸாரஸ்வதம் ஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம், ச்ருதீநாம் விச்ரமாயாலம் சடாரிம் தமுபாஸ்மஹே. இதில் பிற்பாதியின் தாற்பரியம் யாதெனில்; ஸம்ஸ்க்ருத வேதங்கள் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிய வெளியிடவேணுமென்று மிகவும் ச்ரமப்பட்டன. ஆனால் ச்ரமத்திற்குத் தகுதியானபலன் கிடைக்கவில்லை. அந்தோ ! நமக்கு ச்ரமமே மிக்கதே! என்று அந்த வேதங்கள் விடாய்த்தனவாம். அந்த நிலையில் மகிழ்மாலை மார்பினரான நம்மாழ்வார் திருவவதரித்து ஈரச்சொற்களாலே வேதங்களுக்கு உத்தேச்யமான பொருள்களைத் தெளிய வெளியிட்டமையால், வேதங்களுக்கு உண்டாயிருந்த விடாய் தொலைந்ததாம். மிகவும் கம்பீரமான தேசிக ஸூக்திகளிலே இன்னமும் எவ்வளவோ விசேஷதாத்பர்யங்களை ஊஹித்து உணரலாம். பாதுகாஸஹஸ்ரத்தில் ஆழ்வார் விஷயமாக அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகளை ஆராயப்புகுந்தாலோ ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்தவாயினால் மற்றொரு ஸரஸ்வதியைப் பேசவும் கூசவேண்டும்படி அருளிச்செயல்களுக்கு அத்தனை பெருமை. அம்ருதாஸ் வாதிநீ என்னும் தேசிகப்ரபந்தத்திலுள்ள 28ஆம் பாசுரம் அந்தமிலாப் பேரின்ப மருந்தவேட்கும் அடியோமை யறிவுடனே யென்றுங்காத்து, முந்தைவினை நிரைவழியிலொழுகாதெம்மை முன்னிலையாந் தேசிகர்தம முன்னே சேர்த்து, மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி வழிப்படுத்தி வானேற்றி யடிமை கொள்ளத் தந்தையென நின்ற தனித்திருமால் தாளில் தலைவைத்தோஞ் சடகோபனருளினாலே என்ற ஒரு பாசுரம் போதும்.

இப்படிப்பட்ட அபிநிவேசம் தேசிகனுக்கு உண்டானது இரண்டு காரணத்தால். ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார், ஆழ்வான், பட்டர் முதலான பூர்வாசாரியர்கள் எல்லாரும் ஒருமிடறாக ஆழவார் ஸ்ரீஸூக்திகளையே சேம நிதியாகக் கொண்டிருந்தார்கள் என்பது ஒரு காரணம். மற்றொரு காரணம் இப்படிப்பட்ட மஹாசார்யர் பக்கலில் நாம் ஹார்த்தமான பக்தியை வஹிப்பதற்கு லசஷணம் அருளிச்செயல்களை வரியடைவே கற்றுவல்லார் ஆவதே. மற்றும் பல வகைகளாலும் நாம் ஆசார்ய பக்தியைக் காட்டலாம் ஆயினும் இவ்வழியிலே காட்டுவது மிகச்சிறந்ததாகும்.

காஞ்சீ ஸ்ரீ உவே **PBA** ஸ்வாமி அருளியுள்ள த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம் என்கிற நூலில் இருந்து மேலே குறிப்பிட்ட விஷயங்கள் எடுக்கப்பட்டது.

திருவேங்கடமுடையான், ஸ்ரீவேதாந்தாசார்யர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: